40 காலணு Regd. No. M. 2811.


சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும் Acc-No-10813 ஆசிரியர் :
வருட சந்தா 4½ ரூபா சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 1-5-33

"என்ன விநோதம் பாரு!"



கூட்டுக் கமிட்டி என்ற சந்தையில் ஸாப்ரூ, பாத்ரோ போன்ற குழந்தைகள் 'பயாஸ் கோப்' பெட்டிக்காரனிடம் சென்று வேடிக்கை பார்க்கப் போகின்றன. அப்போது ஸாமுயல் ஹோர் பாடுவோன்:—

" என்ன வினோதம் பாரு! எவ்வளவு கோடி ஜனம் பாரு!
வெள்ளைக்காரன் வித்தை பாரு! வில்லிங்டன் வேஷம் பாரு!
தந்ததை நீ வாங்கிக் கொள்ளு! தராவிட்டால் ஸலாம் போடு.

பூனு ஒப்பந்தத்தைத் திருத்தலாகாது

(மகாத்மா காந்தி)

[‘ஒரு தொகுதிக்கு ஹரிஜனங்கள் முதலில் நான்கு பேரைத் தேர்தல் மூலம் எடுக்க வேண்டும்; பிறகு ஹரிஜனங்கள் உள்பட எல்லா ஹிந்துக்களும் சேர்ந்து, அந்த நால்வரில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து சட்ட சபைக் கனுப்ப வேண்டும்; ஹரிஜனங்களுக்கு ஒதுக்கி வைக்கப்படும் ஸ்தானங்களை இவ்வாறு பூர்த்தி செய்ய வேண்டும் என்பது தான் பூனு ஒப்பந்தம். இரண்டு தேர்தல் நடப்பதால் தங்கள் சமூகத்துக்கு அதிகச் செலவு ஏற்படுமென்று ஸ்ரீ அம்பேத்கர் இப்பொழுது பூனு ஒப்பந்தத்துக்கு ஒரு ஆக்ஷேபணை கூறுகிறார். பூனு ஒப்பந்தத்தை மாற்றலாகாதென்று மகாத்மாஜீ அதற்கு பதில் கூறியிருக்கின்றார்.]

“ பூனு திட்டத்தால் செலவு அதிகமாக ஏற்படும் என்ற ஒரே ஒரு ஆட்சேபந்தான் கூறப்படுகிறது. ஹரிஜனங்களுக்குள் நடத்தும் முதல் தேர்தலில் ஒவ்வொரு தொகுதியிலும் போட்டி ஏற்பட்டால் தான் இவ்வாறு செலவு உண்டாகும். நாலுபேருக்கு பதிலாக இரண்டு பேரை ஹரிஜனங்கள் அபேட்சகராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றிருந்தால் தான் அவ்வாறு போட்டியேற்படும். பூனு திட்டப்படி அநேக இடங்களில் முதல் தேர்தல்கூட அவசியமில்லாமல் போகப் போகிறது. ஹரிஜனங்களுக்குள் பல கட்சிகள் ஏற்பட்டு, பலமான பிளவுகள் இருந்தாலொழிய, ஒரு ஸ்தானத்திற்கு நான்கு அபேட்சகருக்கு மேல் முன்வரப் போவதில்லை. சில காலம் வரைக்கும், ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் எல்லா ஸ்தானங்களுக்கும் போட்டியென்பதே யிருக்கப் போவதில்லை.

* * * *

நான் உபவாசம் கிடந்து பலவந்தம் செய்ததாலேயே, எரவ்டா ஒப்பந்தம் ஏற்பட்டதாக வங்காள நண்பர்கள் கூறுகிறார்கள். டாக்டர் அம்பேத்கரும் அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கலாம். அதைப் பற்றி நான் வெட்கப்படவில்லை. என் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் எரவாடா ஒப்பந்தத்தை ஏற்றார்களென்றால், அவர்கள் விருப்பப்பட்டுத் தான் அவ்வாறு செய்தார்கள். பூர்த்தியான ஒரு ஒப்பந்தத்தை இப்பொழுது மறுப்பது நியாயமல்ல. அவர்கள் செய்தது தவறு யிருக்குமானால், அதினின்றும் அவர்களடையக் கூடிய பயன், இனிமேல் அப்படிச் செய்யாமலிருப்பது தான். எவ்வளவு உயர்ந்தவர் உயிரைத் தியாகம் செய்வதா யிருந்தாலும், எவரும் தமது கடமையிலிருந்து பிறழ வேண்டியதில்லை. பிறழவும் கூடாது என்றும் சொல்லலாம்.

தமக்குத் தவறெனத் தோன்றும் ஒரு காரியத்தைச் செய்யுமாறு எவரையும் நிர்ப்பந்திப்பதற்காக எனது உயிரை நான் பணயம் வைக்கவில்லை. முற்றிலும் உன்னதமான ஓர் காரியமென எனக்குத் தோன்றிய ஒன்றைப் பூர்த்தி செய்யவே நான் அவ்வாறு செய்தேன். ஆகையால்,இப்பொழுது செய்யும் வாதப் பிரதிவாதத்தில், அந்த விவாதத்தையும் இழுக்கலாகாது. அற முறையிலோ, பொது நன்மையை உத்தேசித்த முறையிலோ, பூனு ஒப்பந்தத் திட்டத்திலேயே தீமை யிருக்கிறது என்பதை நிரூபிக்க விரும்புபவர்கள் தாராளமாக நிரூபிக்கலாம். தாக்ஷண்யமின்றி எடுத்துக் காட்டி எங்களைத் திருத்தி விடுவார்களானால், ஒப்பந்தத்தை மாற்றுவது பற்றி மறுபடி ஆலோசிக்க வேண்டிய சாவகாசமிருக்கிறது.”

கமலாவுக்கு காந்திஜி கடிதம்

மதுரையில் ஹிந்தி கற்றுக் கொண்டிருக்கும் ஒன்பது வயதுச் சிறுமி கமலாவுக்கு எரவாடாச் சிறையினின்று காந்திஜி அடியிற் கண்ட கடிதத்தை எழுதி யிருக்கிறார் :—

அன்பார்ந்த சின்ன கமலாவே !

என்னை நீ தாத்தா ஆக்கி விட்டாயே ! தேவதாஸ் காந்தி அங்கு வந்திருந்த போது உனக்கு ஸர்டிபிகேட் கடுதாசாவது கொடுத்தார். உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் என்ன இருக்கிறது ? எதைக் கொடுப்பது ? உனக்கு இந்த வித்தை வந்ததற்கு பகவானுடைய கிருபைதான் காரணம்.

உனது தாத்தா

பாபு.

டாலர் பல்டி அடித்ததால்—

(சாணக்கியன் எழுதுகிறார்)

அமெரிக்கக் குடியரசின் தலைவரான ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதம மந்திரியான மாக்டொனல்ட், பிரான்ஸு மேதாவியான ஹெர்ரியட் இம்மூவரும் வாஷிங்டன் நகரில் கூடி உலகப் பொருளாதார நெருக்கடியைப் பற்றியும், அதை நிவர்த்திப்பதெவ்வாறென்றும் பேசினர்கள். பேசியதில் முடிவு ஒன்றும் காண வில்லை. ஆகவே உலகத்தில் ஏற்பட்டுள்ள பணப் பஞ்சத்தையும், வியாபாரக் கஷ்டத்தையும் போக்குவதற்காக அடுத்த ஜூன் 12ம் தேதி யன்று லண்டனில் பெரியதொரு மகாநாடு நடைபெறப் போகிறது. எல்லாத் தேசங்களின் பிரதிநிதிகளும் அங்கு எதிர்பார்க்கப் படுகிறார்கள். அந்த மகா நாட்டின் பயனாக உலகத்துக்கு ஏதாவது க்ஷேம மேற்படுமோ ஏற்படாதோ ஒன்றும் சொல்வதற்கில்லை.

ஆனால் சுதந்திரமுடைய இராஜாங்கங்கள் யாவும் தங்கள் நலங்களுக்கு பேராபத்து வராமல் அவ்வப்போது தற்காத்துக் கொள்கின்றன. அரசுரிமை தங்களிட மில்லாத காரணத்தால் ஏதும் அறியாமல் அடிமை நாடுகள் மட்டும் கலங்கிக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில் அமெரிக்காவில் தங்கக் கலாட்டா தோன்றியதைப் பற்றி நாம் கேள்விப்பட்டோம். அமெரிக்காவினின்று துளி தங்கமும் பிற நாடுகளுக்குப் போகக் கூடாதென்று அமெரிக்கத் தலைவர் கண்டிப்பான உத்தரவு போட்டு விட்டார். செலாவணியின் தங்க மதிப்பையும் உதறிவிட்டார். அமெரிக்காவின் டாலர் பல்டி யடித்ததா வென்று உலகம் முழுதும் கவனித்தது. அதன் பயனாக அமெரிக்காவுக்கு ஏற்படும் நன்மைகள் என்னவென்று அனைவரும் கவனிக்கின்றனர்.

அமெரிக்காவில் இனி பொருள்களின் விலைவாசிகள் சிறிது ஏற்றமடையும். அதனால் அங்குள்ள விவசாயிகளுக்கும், தொழிற் சாலைக்காரர்களுக்கும் மூச்சு விடுவதற்கு வழியேற்படும். மேலும் ஏற்றுமதி வியாபாரம் அதிகமாவதற்கும் இடமுண்டு.

உதாரணமாக ஜப்பான் தங்க மதிப்பைக் கைவிட்டதனால் என்ன ஆயிற்று என்பதை இந்தியர்களாகிய நாம் அநுபவித்து வருகிறோம். 'யென்' என்ற நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டதால் ஜப்பான் சாமான்கள் விலை குறைந்து போய் அவைகளை ஏராளமாக இந்தியாவில் கொண்டு வந்து திணித்து விட்டார்கள்.

அதே மாதிரி இப்போது அமெரிக்காவும் தங்க மதிப்பை உதறி யெறிந்து விட்டபடியால் அமெரிக்காவினின்று ஏற்றுமதியாகும் சாமான்களின் விலைகளும் குறைவடையும். அதன் பயனாக ஜப்பானைப் போலவே அமெரிக்காவும் தனது சாமான்களைக் குறைந்த விலையில் பிற நாடுகளில் திணிக்குமோ என்னவோ யார் கண்டது? சுயராஜ்யமற்ற இந்தியா தான் இத்தனை பேர்களுக்கும் பெரிய சந்தையாகும். அமெரிக்காக்காரனும் இப்போது தன் சாமான்களைக் கொண்டு வந்து திணிப்பானோ என்னவோ? அமெரிக்க சாமான்கள் விலை குறைவாகி விடுவதால் இந்தியத் தொழிலையும், ஏன் பிரிட்டிஷ் வர்த்தகத்தைக் கூட தாக்கியே தீருமன்றோ!

இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் பல விதமாயிருக்கின்றன. நாளுக்கு நாள் இந்தியாவின் தங்கம் கப்பலேறிக் கொண்டே யிருக்கிறது, தடுப்பாரில்லை. சுதேசி சாமான்களோடு அந்நியச் சாமான்கள் போட்டி யிட்டுக்கொண்டு சுதேசித் தொழிலைப் புதைத்து வருகின்றன. வேலையில்லாத் திண்டாட்டமும், பணக் கஷ்டமும் வரவர வலுத்து வருகின்றதே யன்றி கொஞ்சமாவது வெளிச்சத்தைக் காணோம்.

அடுத்தாற்போல லண்டனில் கூடப்போகும் மகா நாட்டில் இந்தியாவின் நெருக்கடியைப் பற்றி வல்லரசுகள் ஆலோசிக்குமா வென்பது சந்தேகமே! ஏழை சொல் அம்பல மேறுமா? பிரிட்டிஷ் சர்க்காருக்கு இந்தியர்களின் செல்வ நிலையைப் பற்றி சிரத்தை யிருப்பதாகத் தெரியவில்லை. சிரத்தை யிருக்குமானால் ரூபாய்க்கும், ஸ்டர்லிங் நோட்டுக்கும் முடி போடுவானேன்? தங்க ஏற்றுமதியைத் தடை செய்யாதிருப்பானேன்? ஒட்டாவா ஒப்பந்தத்தில் இந்தியா தற்கொலை செய்து கொள்ளுமாறு பார்த்துக் கொண்டிருப்பானேன்? ஜப்பான் 'திணி'ப்பை முளையிலேயே கிள்ளி யிருக்கலா மல்லவா?

இதை யெல்லாம் ஆலோசித்தால் நாம் பழைய பல்லவியையே பாட வேண்டி யிருக்கிறது. இந்தியாவுக்கு ஸ்வராஜ்ய மிருந்தால் தான், இந்திய நாணயச் செலாவணி இந்தியர் கைக்கு வந்தால் தான், நமது பொருள் நிலையை நாமே கவனிக்க முடியும். தன் கையே தனக்கு உதவியே யன்றி பிறர் உதவியை நாம் எப்போதும் எதிர்பார்ப்பதற்கில்லை. பவுண்டு பல்டி யடித்தாலும் இந்தியாவுக்கு ஆபத்துதான்! 'யென்' கவிழ்ந்தாலும் நமக்கு நெருக்கடி தான்! டாலர் பல்டி யடித்தாலும் நம்பாடு மோசம் தான்! என்னே நமது நிர்க்கதி!

விலாச மறியாது அலையாதீர்!

"இந்திய வட்ட மேஜை மகா நாடு நடந்த ஸெயின்ட் ஜேம்ஸ் அரண்மனை சிறிய தென்று தோன்றிய படியால் ஸௌத் கென்ஸிங்டனில் விஸ்தாரமான ஓர் அழகிய புதுக் கட்டடத்தில் மகா நாடு கூடும். 170 பிரதிநிதிகள் உட்கார வசதிகளும், 200 பத்திரிகைப் பிரதிநிதிகள் உட்கார வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்" என்று பிரிட்டிஷ் அபிஷியல் தந்தி ஓர் செய்தியை அனுப்பிற்று. இந்த ஏற்பாடுகளெல்லாம் இந்தியாவுக்காக நடத்தும் கூட்டுப் பார்லிமெண்டரி கமிட்டிக்கே என்று 'ஹிந்து' பத்திரிகை நினைத்துக் கொண்டு 'கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி' என்ற செய்தியின் கீழ் இச் செய்தியைப் பிரசுரித்திருக்கிறது.

கூட்டுப் பார்லிமெண்டரி கமிட்டி நடப்பதைக் கவனிக்க 200 பத்திரிகைப் பிரதிநிதிகளென்றவுடன் நமக்கு தூக்கி வாரிப் போட்டது. அந்தக் கூட்டம் கேள்வி முறையில்லாமல் ஏதோ ஓர் மூலையில் 'அந்தரங்கமாக' நடக்கப் போகின்றது. அங்கு வௌவால் தான் பறக்குமே யன்றி பத்திரிகைப் பிரதிநிதிகள் யாரும் போகப் போவதில்லை. ஆனால் கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி என்ற தலைப்பின் கீழ் இந்த விவரமான செய்தியை ஹிந்து பத்திரிகை பிரசுரித்திருக்கிறது. நமக்கு ஓர் பயம். ஒரு வேளை ஹிந்து ஆசிரியருள்பட இந்தியப் பிரதிநிதிகள் கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி நடக்கும் விலாசம் தெரியாமல் லண்டன் தெருக்களில் அலையப் போகிறார்களோ என்னவோ? ஸௌத் கென்ஸிங்டன் மகா நாட்டுக்குள் இந்தியக் கூட்டுப் பாரளிமெண்டு 'பிரதிநிதிகளுக்கு' அநுமதி கிடையா தென்பதும் நிச்சயம்.

ஏனெனில் ஸௌத் கென்ஸிங்டன் கட்டிடத்துக்கு மாற்றப்பட்ட மகா நாடு, இந்தியர்களைப் பற்றிய தன்று. 'உலகப் பொருளாதார மகா நாடு' என்ற பெரிய கூட்டம் அந்தக் கட்டடத்தில் நடக்கப் போவதாக வேறு பத்திரிகைகளினின்று தெரிய வருகிறது. அந்தக் கூட்டத்தைப் பற்றிய ஓர் செய்தியை கூட்டுப் பார்லிமெண்டு செய்தியோடு சேர்த்தது தவறு என்பதைத் தான் நமது சென்னை சகோதரப் பத்திரிகைக்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றோம். ஏனெனில் விலாசம் தெரியாமல் லண்டன் தெருக்களில் இந்தியர் அலைவதை யார் விரும்புவார்கள்?

"மாமியாரே! மாமியாரே"

அழகான வார்த்தைகளில் ஆசைப்பட்டவர் அந்த மிராசுதார். அவர் பண்ணையில் வேலை கிடைக்குமா வென்று ஒரு குமாஸ்தா வந்தான். "அப்பா உன் பேரென்ன?" என்று கேட்டார் மிராசுதார்.

"என் பெயரா! அச்சுப்பிச்சான் என்று அழைப்பார்கள்" என்றுன் குமாஸ்தா. அழகான பெயர்களை விரும்பும் அந்த மிராசுதாரருக்கு இந்தப் பெயர் பிடிக்கவில்லை. அவர் உடனே குமாஸ்தாவுக்கு வேறு பெயர் தர வேண்டுமென்று விரும்பினர். "மௌட்ய சிகாமணி என்று சமுஸ்கிருதத்தில் உன் பெயரை வைத்துக்கொள், நன்ருயிருக்கும்" என்று சிபார்சு செய்தார். பெயர் மாறி விட்டதால் குமாஸ்தாவின் குணம் மாறிவிடவில்லை. பழைய அச்சுப்பிச்சான் தான் அவன்!

அதே மாதிரி கூட்டுக் கமிட்டியில் பேச சீமைக்குப் போய்க் கொண்டிருக்கும் இந்திய 'கனவான்' களுக்கு புதிய பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. "கலந்தாலோசிக்கப் படுபவர்கள்" என்று அழைப்பது விகாரமென்றும் "பிரதிநிதிகள்" என்று அவர்களை அழைக்க வேண்டுமென்றும் பிரிட்டிஷார் தீர்மானித்து விட்டார்களாம்.

இந்தப் புதிய பெயர் கிடைத்து விட்டதால் அங்கு போகும் இந்திய கனவான்களின் கவுரவமோ, அல்லது அந்தஸ்தோ இம்மியாவது உயர்ந்து விடவில்லை. பார்லிமெண்டு கமிட்டியில் வோட்டுக் கொடுக்க கை தூக்குவதற்கு அப்போதும் உரிமையில்லை. புதிய பெயர் கிடைத்த பின்பு இப்போதும் உரிமை கிடையாது. எப்போதும் பழைய குருடிகள் தான்!

ஏமாற்றுவதற்காக பிரிட்டிஷார் செய்துள்ள சூழ்ச்சியில் இதுவுமொன்று. பெயரை மாற்றுகின்ருர்களே யன்றி அந்தஸ்தை துளியாவது உயர்த்தவில்லை. மரியாதையாக மாமியாரை அழைக்க விரும்பிய நாட்டுப் பெண், "மாமியாரவர்களே! மாமியாரவர்களே! தங்கள் திருத்தாலியை அறுத்தாப் போலிருக்கிறது" என்று கூறியதில் எவ்வளவு மரியாதையோ அதேபோல் இந்திய 'கனவான்'களுக்கு இப்போது மரியாதையாக பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மகா தியாகம்

(தபாற்கூலி உள்பட 5 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.)

ஏழையின் கண்ணீர்

இராகம் : நொண்டிச்சிந்து

ஐயா ! என் அல்லல் கேளும் ;—நானிதை
யாரிடம் சொல்லி யழுதிடுவேன் !
எழுந்திடு(ம்) நேரமுதல்—வயலில்
உழுது, விதைத்து, நல்ல நீர் பாய்ச்சி,

ஓயா துழைத்தாலும்,—எனக்கு
ஒருகணமும் உள மகிழ்விலையே !
காலையி லெழுந்திருந்தால்,—இன்று
கஞ்சி குடிக்க வழி யேதெனவே

கவலையி லாழ்ந்திடுவேன்—எனது
குழந்தைகள் ஒருபுறம் கதறியழ,
கடன்காரர் வசைபாட,—பாவி நான்
கடைத்தேற வழியொன்றுங் காணாதே,

கடவுளை நினைந் தழுவேன்—கட்டவோ
கந்தை தவிறவேறு கண்டறியேன்
கையிலொரு காசுமிலை—நாங்கள்
குடியிருக்கும் சிறு குடிசையிலும்

குப்பை குவிந்திருக்கும்,—கொடிய
நாற்றமு மங்கு நிறைந்திருக்கும் ;
நீக்கிட வழியிலையே !—அருந்திட
நீருங் கிடைப்பதிலை பாருமய்யா !

நோய்க்கு மருந்துமிலை ;—தெருவில்
நாய்க்குக் கிட்டுமுணவு(ம்) நானறியேன் !
" வீதியில் வாராதே !—வந்தால்
உதைத் திடுவேன், உனைச் சிதைத்திடுவேன் !

காலை முறித்திடுவேன் !"—என்று
கண்டவிடத்திற் கடு கடுவெனவே
கல்லால் அடிக்கின்றார்—ஆண்டவன்
கோயிலில் நின்று நான் கைதொழுதால்,

குற்றம் குறையுமுண்டோ ?—அங்கும்
கடிந்து விரட்டி யெனைக் கொடுமொழியால்
தூற்றிக் களிக்கின்றார்—வேதங்கள்
சொல்லிடும் நல்வழி மாறிடுமோ ?

காற்றிற் கிடந்துழலும்—பஞ்செனக்
கலங்கிக் கிடக்குமெனைக் கண்டபின்னும்,
இரக்கம் பிறக்காதோ ?—கதியற்று
ஏங்கிக் கிடக்குமெனை ஏசுவதோ ?

அரக்கரும் இரங்குவரே—எந்தன்
ஏழ்மை நிலைதனை யெடுத்துரைத்தால் !
இந்த அநியாயம்—எந்த
நாட்டிலும் யாரேனும் கேட்டதுண்டோ ?
இரவு பகலாக—என்றும்
உழைக்கு மெனக்குக் கிட்டு(ம்) உதவி யாதோ !
என் செய்வேன் ஜகதீசா !

—ரா. மு. கிருஷ்ணபாரதி கழனி வாசல்.

ஸுபாஷ் பாபுவின் கடிதம்

வியன்னா நகரத்தில் சிகிச்சைக்காகத் தங்கியிருக்கும் வங்க மணி சுபாஷ் சந்திர போஸ் இந்தியாவிலுள்ள ஒரு நண்பருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அடியிற் கண்ட கருத்துக்கள் காணப் படுகின்றன:

"கூடிய சீக்கிரத்தில் பிரிட்டிஷ் மந்திரி சபையோ பிரிட்டிஷ் பார்லிமெண்டோ பாரத நாட்டின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்து வைப்பார்களென எண்ணுவதற்கில்லை. உலகில் எங்கு நோக்கினும் இப்போது விதண்டக் கொள்கைகள், தலை யெடுத்திருக்கின்றன. இது கொஞ்ச காலம் தாண்டவமாடியே தீரும். இந்தியா சுதந்திரமடைந்தே தீரவேண்டுமென வாஸ்தவமாக நாம் விரும்பினால் இன்னும் வேலை செய்யவும், கஷ்டப்படவும், தியாகம் செய்யவும், நாம் முற்படவேண்டும். வயோதிகப் பருவ மடைந்தவர்கள் தாங்கள் சளைத்துவிட்டதாக நினைத்துக் கொண்டால் அவர்கள் இளங் காளைகளுக்கு இடங்கொடுத்து விட்டு விலகிக் கொள்வார்களாக ! இந்த சமயத்தில் சமரசப் பேச்சு தொடங்குவது இந்தியாவின் உள்ளுணர்ச்சியைத் தொலைத்து விடும் ! யாதொரு நன்மையும் அதனால் கிட்டாது ! உலகத்தின் பல நாடுகளிலும் இந்தியா மீது ஏற்பட்டிருக்கும் ஓர் அநுதாபமும் அழிக்கப்பட்டு விடும்."

அதே கடிதத்தில் தமது உடல் நிலை ஒருவாறு குணப்பட்டு வருவதாகவும், ஆனால் உடம்பு வலி குறையவில்லையென்றும், உடல் எடை சிறிது அதிகமாயிருப்பதாகவும் சுபாஷ் பாபு எழுதி யிருக்கிறார். இந்த வீரன் சீக்கிரம் உடல் நலமடைந்து தாய் நாடு திரும்ப வேண்டுமென தேசம் பிரார்த்திக்கிறது.

கடன் கொடுத்த பணம்

(கபாலி எழுதியது)

எந்த வித்தைக்கு ஆபத்து நேர்ந்தாலும் கடன் வாங்கி சுக ஜீவனம் செய்து கொண்டிருக்கும் வித்தைக்கு மாத்திரம் நெருக்கடி ஒரு போதும் நேராது என்பது எனதபிப்பிராயம். பணம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் தங்கள் பணம் குட்டி போட வேண்டு மென்றே நினைப்பார்கள்; கர்ப்பத் தடை முறையை பணத்துக்குப் பிரயோகிக்க மாட்டார்கள்; கடனைக் கொடுத்து வட்டி, வட்டிக்கு வட்டி, இவ்வாறு பெருக்கிக் கொண்டேயிருப்பதில் தான் அவர்களுக்கு இன்பம். அது தான் தொழிலும்! பணம் வைத்துக் கொண்டிருப்பவனுக்கு கை யரிப்பது போல், வழக்கமாகக் கடன் வாங்குபவனுக்கும் கையரித்துக் கொண்டுதானே யிருக்கும். இப்போது கடன் வாங்கி ஜீவனம் செய்யும் தொழிலுக்கும் விபத்து ஏற்படும் போலிருக்கிறது. ஏனெனில் இனிமேல் யாராவது உலகில் பிறருக்கு கடன் கொடுப்பார்களா என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

எனது நண்பர் திப்பு என்னிடம் இது சம்பந்தமாகச் சொன்ன கதை யொன்று நினைவுக்கு வருகிறது:—"கடன் கொடுத்தவனுக்கும் கடன் வாங்கினவனுக்கும் தகராறு ஏற்பட்டு விட்டால், மகமத் தோக்ளாக் அரசாண்ட காலத்தில் சமாதானம் செய்து வைப்பதுண்டு. எப்படி யெனின், வாங்கின கடனைக் கொடுக்க முடியாதவனை முச்சந்தியில் நிறுத்தி வைத்துக் கசையடி அடித்து விடுவார்களாம். கடன் வாங்கினவன் அடியை வாங்கிக் கொண்டு கையைத் துடைத்துக் கொண்டு போய் விடுவான். கடன் கொடுத்தவனோ, "ஒரு அடி 100 ரூ. பெறுமே" என்று கணக்குப் போட்டு தனது பைக்குள் 1200 ரூபாய் சேர்ந்து விட்டதாக நினைத்து வீடு போய்ச் சேர்வான். இது சமரஸமான முடிவு தானே!" மிஸ்டர் திப்பு சொல்வது நல்ல கதை. அந்தக் காலத்தில் கடன் பட்டவனுக்கு அடியைத் தாங்க தேக பலமிருந்தது. கடன் தந்தவனுக்கோ பணம் செழித்துக் கிடந்ததால் வரவு செலவு தெரியாதிருந்தது. ஆனால் இப்போது அத்தகைய வழி பயன் படுமா?

இப்போது இந்திய அரசாங்கத்தார் சில்லரைக் கடன்காரர்களைப் பற்றிய ஓர் ஆலோசனையைச் செய்து வருகின்றார்களாம். மாகாண துரைத்தனங்களைக் கேட்டிருக்கின்றார்களாம். "கடன் பட்டவர்கள் பணம் தராவிட்டால் சிறையில் போடப்படுவார்களென்ற பயம் இருந்து வருகிறது. அவர்களைச் சிறையில் போடாமலே பணத்தை வசூலிக்க சிறந்த வழி ஏதாவதுண்டா?" என்று கேட்டிருக்கின்றதாம்.

கடன் வாங்கி வாங்கி ஜீவனம் செய்யும் வழக்க முடையவர்கள் இதைக் கேட்டால் திடுக்கிடுவார்கள். ஏனெனில், முதலாளியிடம் கடன் வாங்கி கொஞ்ச நாள் ஜீவனம் செய்யலாம்; பிறகு கடனைத் திருப்பிக் கொடுக்காததற்காக ஜெயிலில் போடப்பட்டால் அதைச் சத்திரம் போலவும், மாமியார் வீடு போலவும் எண்ணிக் கொண்டு பல மாதம் சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம். சமீபத்தில் தான் ஜெயில்படி கூட உயர்த்தப் பட்டிருக்கிறது. ஏழெட்டு ரூபாயாக இருந்ததை 15 ரூபாயாக ஆக்கினார்கள். இதற்குள் இனி கடன்பட்டவனுக்குச் சிறையில்லை யென்று சொல்லி விட்டால் சத்திரச் சாப்பாடு கிடைக்காது போய் விடுமே! இவ்வாறாக எண்ணி கடன் வாங்கும் வழக்க முடையவர்கள், வருந்துகின்றார்களாம். அது மட்டு மன்று. இப்படிச் செய்து விட்டால் இனி எந்த முதலாளியும் கடன் கொடுக்கவும் மாட்டானே யென்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் பிறருக்குக் கடன் கொடுத்துக் கொண்டிருக்கும் பிரமுகர்கள் வேறு விதமாக எண்ணுகிறார்கள். "இந்தப் பணப் பஞ்ச காலத்தில் கோர்ட்டு நடவடிக்கை எப்படி நடத்துவது? கையை விரிக்கும் கடன்காரனைச் சிறையில் உட்கார வைத்து யார் சோறு போடுவது? யார் படி கட்டுவது? ஜெயில் தண்டனை விஷயம் இருந்தும் ஒன்று தான்; இல்லா திருப்பினும் ஒன்று தான்" என்று அவர்கள் இப்போது கருதுகிறார்களாம்.

கடன் தருகின்ற வழக்க முடையவன் தந்து கொண்டிருக்கும் வரையில் வாங்கிச் சாப்பிடுபவன் சாப்பிட வேண்டியது தானே! கடன் கொடுத்தவனுக்கு தொகை வசூலானால் கொடுத்த பணம் குட்டி போட்டதென்று அர்த்தம். வசூலாகா விட்டால் கர்ப்பக் கோளாறால் குட்டியும், தாயும் செத்து விட்ட தென்று அர்த்தம். "வருவது வந்தே தீரும்" என்று எண்ணிக்கொண்டு கடன் தந்தவன், வாங்கினவன் எல்லோரும் நடக்கவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நமது குறிப்புகள்

கல்லா, குழந்தையா ?

தஞ்சாவூர் போர்ஸ்டல் சிறையில் பின்வரும் அக்கிரமம் நிகழ்ந்ததாக, ஒருவர் "சுயராஜ்யா" வுக்கு எழுதியிருக்கிறார் :—"ஒரு சிறு பையன் (அரசியல் கைதி) சாவிக் கொத்தொன்றைத் திருடிவிட்டதாகச் சந்தேகித்து, இரக்க மின்றி இருபது முப்பது பேர் அடித்து மூர்ச்சை யடையச் செய்தார்கள். பிறகு கையையும், காலையும் கட்டி, ஒரு கல்லை விட்டெறிவது போல, குறுகலான சாக்கடையில் பல தடவை விட்டெறிந்தார்கள். பின்னர், கொளுத்தும் வெயிலில் நிறுத்தி, சர்க்கரையைத் தண்ணீரில் கரைத்து அவன் மேல் ஊற்றினார்கள். இதனால் அவன்மேல் ஈ மொய்த்துக் கொண்டது. நகக் கணுவில் பல குண்டூசிகளை ஏற்றினார்கள். இக் கொடுமைகள் தாங்காமல், சாவிக் கொத்தைத் திருடியதாக அவன் ஒப்புக்கொண்டு, அதைக் கிணற்றில் எறிந்ததாக அவன் கூறினான். கிணற் றைத் தேடிப் பார்க்கையில், சாவியுமில்லை, கொத்துமில்லை. அவன் திருடவில்லை யென் பது கடைசியில் கண்டு பிடிக்கப்பட்டது." இந்த நிருபர் கூறும் விஷயங்கள் உண்மையா யிருக்குமானால், போர்ஸ்டல் கலாசாலை அதி காரிகள் மனித ஜன்மங்களா வென்ற சந்தே கம் ஏற்படுகிறது. இதைப் பற்றி சர்க்கார் விசாரித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

யாருடைய தவறு ?

புதுக்கோட்டை சட்ட சபையில் உத்யோ கஸ்தர் சம்பளங்களைக் குறைப்பதுபற்றி ஓர் தீர்மானம் வந்தது. அந்த விவரத்தைப்பற்றி 'ஹிந்து' பத்திரிகை நிருபர் அனுப்பிய செய்தி யில் பின்வரும் வரிகள் காணப்படுகின்றன. "தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் வோட் டுக்கு விடக் கோரியபடியால் வோட்டெடுக்கப் பட்டுத் தீர்மானம் தோல்வியுற்றது. தீர்மானத் துக்காக 18 பேரும் அதற்கு விரோதமாக 15பேரும் வோட்டுக் கொடுத்தார்கள்." வோட்டு ஓர் விதமாயிருக்க நிருபர் அதற்கு முடிவு கூறு வது தலைகீழா யிருக்கிறதே என்பதை 'ஸ்வ ராஜ்யா' பத்திரிகையில் 'கிளினர்' என்பார் காட்டி யிருக்கின்றார். ஹிந்து பத்திரிகைக் குச் செய்தி அனுப்பிய நிருபராவது தவறி யிருக்க வேண்டும்; அல்லது பத்திரிகாலயத்தி லாவது தவறு ஏற்பட்டிருக்க வேண்டுமென்று பல்லி சொல்கின்றது. அது யாருடைய தவறு?

சபாஷ்! காரைக்குடி

காரைக்குடி ஜில்லா தீண்டாமை விலக்குச் சங்கத் தலைவர் ஒரு மேலான காரியத்தைச் செய்தாரென்றால், அது காரைக்குடிக்கே பெருமை தானே. தேவகோட்டை வக்கீல் ரங்கசாமி அய்யங்கார் காரைக்குடி ஜில்லாத் தீண்டாமை விலக்குச் சங்கத் தலைவர். அவர் காரைக்குடி முனிசிபாலிடியில் ஒரு அங்கத்தி னர். அவர் வெற்றி பெற்ற தொகுதி பிராமணர் கள் அக்கிரகாரம். அவர் இப்பொழுது முனி சிபல் கவுன்சிலர் பதவியை ராஜீனமாச் செய்து விட்டார். காரணம் என்ன ? தமது தொகு திக்காரர்களுக்குத் தீண்டாமை விலக்கில் அநு தாப மில்லையானால், தாம் முனிசிபாலிடியில் அங்கம் வகிக்க லாகாது என்பது அவர் கருத்து. ஆகையால், தீண்டாமை விலக்கை முக்கியப் பிரச்சினையாக வைத்து, மறு தேர்த லுக்கு அங்கு நிற்கப் போகிறார். கிடைத்த பதவியை விடலாகாதென்ற எண்ணமின்றி, இம் மாதிரி அவர் நடந்து கொண்டது அவருடைய நாணயத்தையும் ஊக்கத்தையும் காட்டுகின்றது. வெற்றியோ, தோல்வியோ அதைப் பற்றிக் கவலையில்லை. உறங்குபவர்களைத் தட்டி யெழு ப்ப, இதுபோன்ற காரியங்கள் மிக அவசிய மாகும்.

அப்பேர்ப்பட்ட குற்றவாளிகளா ?

"காங்கிரஸ்காரர்கள் அப்பேர்ப்பட்ட குற்ற வாளிகளா ? அவர்களுக்குச் சோறு, தண்ணீர், தங்கி யிருக்க வீடு ஏதும் தரலாகாதா ? சிறைத் தண்டனை என்பதற்கு பயந்து கொண்டு ஒவ் வொருவரும் காங்கிரஸ்காரனை பகிஷ்காரம் செய்ய வேண்டு மென்பது நியதியா ? கள்ளிக் கோட்டையினின்று கிடைத்த ஒரு தந்திச் செய்தியைக் கவனிக்கும் போது இந்த எண் ணங்கள் ஏற்படுகின்றன. நடுவானூர் என்ற கிராமத்தின் கிராம முன்சீப், காங்கிரஸ் தொண் டர்களுக்கு ஏப்ரல் 6-ம் தேதி யன்று சாதம் போட்ட காரணமாக 6 மாதம் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டாராம். அந்த ஏழை முன் ஸீபுக்கு நிச்சலமான சிறையில் உட்கார்ந்து கொண்டு ஆலோசிக்க சமயம் கிடைத்திருக் கிறது. அவர் தற்போது அமுலிலுள்ள 'நியாய' த்தைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறாரோ என் னவோ ? காங்கிரஸ் வேகத்தை தேசத்தினின்று போக்குவதற்கு இதுதான் வழி யென்று ஸாமு யேல் ஹோர் நினைக்கின்றார் போலும் !"

—"அட்வான்ஸ்"

சட்ட மறுப்பு இயக்கம்

குஜராத் வித்யாபீட ரிஜிஸ்திராரா யிருந்த நரஹரி பரேக் என்பார் கவர்ன்மெண்ட் உத்தரவை மீறியதற்காக 2 வருடச் சிறையும் 50 ரூ. அபராதமும் விதிக்கப் பட்டார்.

கல்கத்தா காங்கிரஸுக்குப் பிரதிநிதிகளாக வந்த 12 சிக்கியர்களுக்கும் 40 ரூபா அபராதம் அல்லது ஒரு வார காவல் தண்டனை விதிக்கப் பட்டது.

'நதியாத்' அரசியல் மகாநாடு சம்பந்தமாக 50 பேர் கைது செய்யப்பட்டார்கள். பின்னுல், மகா நாட்டுத் தலைவர், வரவேற்புக் கழகத்தலைவர், மற்றும் மூவர் ஆகியவரைத் தவிர மற்றெல்லாரும் விடுதலை யடைந்தார்கள்.

கள்ளிக் கோட்டையில் ஏப்பிரல் 2உ சுதந்திர தினம் கொண்டாடியது சம்பந்தமாகப் பிரம்படிக்கும் கலையாது நின்ற 12 தொண்டர் கைது செய்யப் பட்டார்கள்.

கோர்ட்டு வாசலில் மகாநாடு

பாட்னுவைச் சேர்ந்த சாப்ரா என்றவிடத்தில் கோர்ட்டு கட்டிட வாசலில் ஜில்லா ராஜீய மகா நாடு கூட்டப்பட்டதன் சம்பந்தமாக 23 பேர்கள் கைது செய்யப்பட்டதில் 13 பேர்களுக்கு பலதிறப்பட்ட தண்டனை. மற்றவர்களுக்கு விடுதலை.

கிராமங்களுக்கு அபறதம்

பெஷாவரில் டே பஹதூர், சுபெதேரி என்ற கிராமங்களில் செஞ்சட்டைத் தொண்டர் கூட்டம் கூடி, மைல் கல்லுகளுக்கு சிவப்பு வர்ணம் பூசினர்களாம். இதற்காக, அந்த கிராமங்களுக்கு சர்க்கார் தலா 200 ரூபாய் அபராதம் விதித்திருக்கிறது.

தேசீயக் கோடி

இராமேசுவரம் கோவில் மேலக் கோபுரத்தின் உச்சியில் காங்கிரஸ் தேசீயக் கொடி சில நாட்களாகப் பறந்து வருகின்றனவாம். நகரின் பல பாகங்களிலும் கொடிகள் பறக்கின்றதோடு பகிஷ்கார வாக்கியங்களும் காணப்படுகின்றனவாம்.

ஏழைகளுக்கு உதவும்

வள்ளுவநாடு தாலுக்கா போர்டார் ஹரிஜனப் பிள்ளைகளுக்கு புஸ்தகங்கள் ஸ்லேட்டு பென்சில்கள், ஆறு மாதத்திற்கொரு முறை 2 வேஷ்டிகள் ஆகியவைகள் இனமாக வாங்கிக் கொடுப்பதென்று தீர்மானித்திருக்கின்றனராம்.

காந்திஜியின் ஐரோப்பிய சிஷ்யை

பெங்களூரில் சில மாதங்களுக்கு முன்னே தெருக்களைச் சுத்தம் செய்த மிஸஸ் நீலா குக் என்ற ஐரோப்பிய மாதரசி மகாத்மாவின் ஸபர்மதி ஆசிரமத்தில் சேர்வதென்று தீர்மானித்து விட்டாள். அவளோடு டாக்டர் பட்டம் பெற்ற ஒரு ஜர்மன் மாதும் மேற்படி ஆசிரமத்திலேயே சேருவாள்.

பிரிவினைக்கு லஞ்சமா?

சட்ட சபை அங்கத்தினருக்கு பர்மாப் பிரிவினை சம்பந்தமாக லஞ்சம் கொடுக்கப்பட்டதாகப் பரவி யிருக்கும் வதந்தியைப் பற்றிக் கேள்வி கேட்ட பொழுது, பர்மா சர்க்கார் தரப்பில் தங்களுக்குத் திட்டமான தகவல் கிடைக்கவில்லை யென்றும், பத்திரிகைகளில் இவ் வதந்தி மறுக்கப் படவில்லை யென்றும் பதில் சொல்லப்பட்டது.

டாலருக்குப் பாதி தங்கம்

ஒரு டாலரில் இருக்கும் தங்கத்தைப் படிக்குப் பாதி குறைத்துவிட பிரஸிடெண்டு ரூஸ்வெல்டுக்கு அதிகாரம் கொடுக்கும் மசோதா அமெரிக்க ஐக்கிய ராஜ்ய செனேட் சபையில் நிறைவேறி விட்டது.

இங்கிலாந்து-இந்தியா டெலிபோன்

இங்கிலாந்து-இந்தியா ரேடியோ டெலிபோன் மேமீ 1 தேதி திறக்கப்படும். பிரிட்டனிலிருந்து பம்பாய்க்கோ பூனுவுக்கோ 3 நிமிஷம் பேச 6 பவுன் கூலியாம்.

கிழக்கு சீன ரயில்வேயின் சாமான்களைப் பறிமுதல் செய்யுமாறு ஜப்பான் மஞ்சூகோவுக்கு தாக்கீது கொடுத்திருக்கிறதாம். இதனுல் ரஷியாவோடு ஜப்பானுக்கு தகராறு ஏற்படுமாம்.

ராஜீயச் சிறையாளர்கள்

இவ்வருஷம் பிப்ரவரியில் சிறையில் இருந்த மொத்த ராஜீயக் கைதிகள் 13671. மார்ச்சுக் கடைசியில் 12639 பேர்கள். இவர்களில் ஸ்திரீகள் 636 பேர்களென்று சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R, Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.